DYNAMIC CUBES asianpaints
HOME PAINTING SERVICE
PROFESSIONAL PAINTING
SPECIAL OFFER
EXTERIOR PAINTING WORK INCLUDING MATERIAL
STARTING FROM JUST
@RS 10/- PER SQFT
82482 65196

# GST ROAD NEWS

Email:gstroadnews@gmail.com
CHROMPET
Weekly News Paper
www.gstroadnews.com
Chromepet, Radha Nagar, Hasthinapuram, New Colony, Nehru Nagar
Vol:13 Issue -24 21 Sep 2025 - 27 Sep 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902



ALL KINDS OF LAPTOPS DESKTOPS ACCESSORIES AVAILABLE
SALES & SERVICE
99529 96682



CRAVING MANIA
We serve what you desire
Cakes, Cookies, Brownies and So On...
By Sangeeta Sahu
Since 2018
ONLY PRE-ORDERS ACCEPTED
Freshly Made | No Walk-ins
ORDER NOW HERE
100% VEG
9498038206 @Cravingmania @Cravingmania @Cravingmania

FLATS FOR SALE
@ CHROMEPET
Paul Victor Street, Near MIT Bridge
100 Mtrs From GST Road
Deluxe Flats
2 & 3 BHK - 954, 1023 & 1103 Sqft
@ PALLIKARANAI
LIC Nagar, (Nr. Velammal New Gen School)
2 BHK Deluxe Flats
GF - 893 Sqft & 2nd Floor - 1045 Sqft
(With 300 Sqft Pvt Terrace)
Just 3-in-one Complex
@ KUMBAKONAM
Solaiappan Street, 100 Mtrs from River Kaveri
700 Mtrs From Kumbeswarar Temple
1 & 2 BHK - 410, 671 & 644 Sqft
Balaji Homes
98408 40017 / 88382 74383



SHIKSHAA PUBLIC SCHOOL
NO. 1 CBSE SCHOOL IN CHROMEPET
ISO 9001 2015 CERTIFIED
VIJAYADASHAMI
ADMISSION OPEN
2025 - 2026
AC Classrooms
Live CCTV Access for Parents
Van facility with GPS
Daycare Facility
Admission fee 50% waived off & Term 1 fee waived off
Your child deserves the best education
No. 8, Ponniamman Koil St., Hasthinapuram, Chennai - 64
9176407863 & 9345021509, www.sps.edu.in /admission@sps.edu.in



INDIVIDUAL VILLA FOR SALE
READY TO MOVE
@ MADAMBAKKAM
SUDHARSAN NAGAR
3 BHK
STARTING BUDGET 1.20 TO 1.40 CRORE
WITH INTERIOR WORKS
TOTAL 7 UNITS
MAJESTIC FOUNDATION
98841 31132
96000 25369



WANTED
OFFICE HELPERS
MALE/ FEMALE
@ GST ROAD, CHROMEPET
6382483412



3 BHK INDEPENDENT DUPLEX HOUSE
FOR SALE@ CHROMPET
Site Address :
Hasthinapuram, Saraswathi Nagar
Nr. Thirumalai Nagar, Zion School
3 BHK
As per Vasthu, CCP, Loan Arranged
MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382 / 94442 55004

WANTED
SITE SUPERVISOR-MALE
(12TH TO ANY DEGREE)
OFFICE STAFF-MALE
(ANY DEGREE - COMPUTER KNOWLEDGE MUST)
SMC PROMOTERS
72008 28828



LAPTOPS & COMPUTERS
SALES | SERVICES | ACCESSORIES
ஐசர்விஸ்
iService
DOOR STEP SERVICE
MONDAY to SUNDAY
10 AM TO 6 PM
No3.PADMANABHA STREET, NEHRU NAGAR, CHROMEPET
99401 60664, 94444 39494



PREMIUM FLATS FOR SALE @ CHROMPET
THIRUMALAI NAGAR, Nr. Zion School
READY TO MOVE
Natarajan Apartment
2 BHK
980 Sqft
3 BHK
1240 Sqft
Rs.72L
ALL INCLUSIVE
☑ Lift ☑ CCP ☑ CCTV
☑ As Per Vasthu
GJ CONSTRUCTION
98409 41585



HILTON
MATRICULATION HIGHER SECONDARY SCHOOL
CHROMEPET, CHENNAI-44
28th Years of Excellence
H-HONESTY
I-INTELLIGENCE
L-LEADERSHIP
T-TRUTHFULNESS
O-OBEDIENCE
N-NOBILITY
VIJAYADASHAMI
ADMISSIONS OPEN
2025-2026
For LKG & UKG Classes
LIMITED SEATS ONLY
Spacious Playground
Smart Classrooms
Moral Values and Life skills
Qualified Teachers
RIGHT TIME TO SOW YOUR CHILD @HILTON
ACADEMIC EXCELLENCE
SPORTS EXCELLENCE
CULTURAL EXCELLENCE
044-22411552 / 22418061
hiltonschool90@gmail.com
Dr. Mrs.M.MALA CORRESPONDENT
Mr.S.BALAJI PRINCIPAL
PRIMARY TEACHERS & STAFF NURSE WANTED

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET
PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
NEW Projects
24 HRS POWER BACKUP*
4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft
BALAJI NAGAR
Nr. PURUSHOTHAMAN NGR PERUMAL TEMPLE
NEW Projects
24 HRS POWER BACKUP*
4 BHK - 1710 Sqft
2 BHK - 867 & 843 Sqft
BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
NEW Projects
24 HRS POWER BACKUP*
3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft
Specification
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Red Bricks Construction
Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL HDFC BANK SBI







# செல்வம் அள்ளித்தரும் மகாளயம் விரதம்

புரட்டாசி அமாவாசைக்கு முன் பதினான்கு நாட்களாக விரதம் இருந்து அமாவாசை அன்று நம் மூதாதையருக்கு தரும் தர்ப்பணம் நம் குலத் தோன்றல்களுக்கும் எதிர்வரும் சந்ததியர்களுக்கும் செல்வச் செழிப்பையும் நற்பண்புகளையும் தரவல்லது.

எனவே தினம் தினம் ஆலயம் சென்று இறைவனை வழிபட முடியாதவர்களும் இதுவரை பித்ரு பூஜை செய்யாதவர்களும் கூட இந்த மகாளய காலத்தில் பித்ருக்களை நினைத்து வழிபட வேண்டும். வீட்டில் காலம் சென்ற மூதாதையரின் படம் இருக்குமானால் அதன் முன் இக்காலத்தில் தினம் தினம் ஏதாவது ஒரு சாதம் செய்து படையல் இட்டு வழிபாடு செய்யலாம்.

பழவகைகளில் ஏதாவது ஒன்றினை தினம் படைத்து வீட்டில் உள்ளவர்களுக்கு தரலாம். பிடித்த பலகாரங்களை செய்து அவர்களுக்கு படைத்து எள் எண்ணெய் தீபம் தனியாக போட்டு வழிபாடு செய்ய வேண்டும். நம் முன்னோர்களை நினைத்து வயதானவர்களுக்கும் ஏழை



முதியோர்களுக்கும் உணவு அளித்து அவர்களுக்கு துணி மணி தானம் தந்தால் நம் முன்னோர்கள் அதனைக் கண்டு மகிழ்ந்து நம் குலத்தவர்களை வாழ்த்துகின்றனர்.

மூதாதயரை நினைத்து காகத்திற்கு வீட்டின் தென்மேற்கு பாகத்தில் அல்லது தென் கிழக்கு பாகத்தில் சாதம் வைத்து வழிபட்டால் மிக நன்மைகள் கிடைக்கும்.

காசி, கயா, பத்ரிநாத், திருக்கயிலை, மானஷரோவர், திதி தர ஏற்ற இடங்கள். தமிழகத்தில் ராமேஸ்வரம் சென்னை மத்திய கைலாசம், திருக்கழுக்குன்றம்., பவானி கூடுதுரை, ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம், பாபநாசம், கும்பகோணம் அருகில் உள்ள செதலபதி ஆதி விநாயகர் ஆலயம், பூம்புகார் சங்கமுகேஸ்வரர் ஆலயம், திருக்கோவரணம் போன்ற இடங்கள் திருவெண்காடு, உடுமலை திருமூர்த்திமலை அமண லிங்கேஸ்வரர் ஆலயம், மற்றும் ஆற்றங்கரைகளிலும் பித்ருக்களுக்காக நாம் பிண்டம் பிடித்து தர்ப்பனம் செய்வது கூடுதல் பலன் தரவல்லது.

# நந்தி பகவானின் நாக்கு மூக்கை அடைத்துக்கொண்டிருப்பது ஏன்?

சிவ கணங்களுக்குத் தலைவர் நந்தி தேவர். சிவாலயங்களில் அதிகார நந்தியாக இருந்து பக்தர்களின் மனங்களை பரிசோதித்து அனுப்பும் அதிகாரம் பெற்றவர். இதன் காரணமாகவே பிரதோஷ வேளையில் நந்தியின் காதுகளில் தங்களது குறைகளைச் சொன்னால் அவை முற்றிலும் நீங்கிவிடும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. குறிப்பாக, திருமணமா காத பெண்கள் அன்றைய தினத்தில் நந்தியின் காதில் மனமுருக பிரார்த்தித்தால் விரைவில் திருமணம் நடைபெறும். தொடர்ந்து பன்னிரண்டு மகா பிரதோஷ வேலைகளில் சிவாலயம் சென்று நந்தி தேவரை முறையாக பூஜித்து, நந்தி தேவரின் காதருகில் சென்று மற்றவர் கேட்காத வகையில் நம் குறைகளைக் கூறி வந்தால் நிச்சயம் வேண்டிய பலன் கிட்டும் என்பது பக்தர்களின்



நம்பிக்கை.

சிவன் கோயில் நுழைவு வாயிலில் இருப்பவர் அதிகார நந்தி. முகம் மட்டும் பசு வடிவிலும், உடல் சிவ சொரூபமாகவும் இவர் காட்சி தருவார். இவருடைய அனுமதி பெற்றே ஆலயத்தில் நுழைகிறோம் என்பது ஐதீகம் ஆகும். சிவபெருமான் பிரதோஷ காலத்தில் நந்தி யின் இரு கொம்புகளுக்கு இடையே நடனம் ஆடுவ தால் நந்தி தரிசனம் சிவ தாண்டவ தரிசனம் ஆகி விடுகிறது. நந்தியின் இரு கொம்பு களுக்கு இடையே சிவபெருமானை தரிசித்தால் எல்லா தேவதைகளையும் தரிசித்த பலன் உண்டு.

பகிரபடும் பகிர்வுகள் பிறர் அறிந்துக் கொள்வதற்காக தவிர பிறர் பிரதி உரிமையை மீறும் எண்ணம் இல்லை..அசல் பதிவேற்றியவருக்கு நன்றி.நந்தி ரிஷப சொரூபமாகவும் சிவ சொரூபமாகவும் உள்ளவர். சிவன் சன்னிதியில் காட்சி தரும் நந்தியின் நாக்கு இடது நாசியை அடைத்துக் கொண்டிருக்கும். நந்தி தனது வலது நாசியால் சுவாசிப்பதாக இதற்குப் பொருள். இதை சூரிய கலை என்கிறோம். சிவன் கோயில் அம்மன் சன்னிதியில் உள்ள நந்தியின் நாக்கு வலது நாசியை மூடியது போல் இருக்கும். இங்கு நந்தி இடது நாசியினால் சுவாசம் செய்கிறார் என்பது பொருளாகும். இது சந்திர கலை எனப்படும். ஆலயத்தின் வெளியே அமர்ந்திருக்கும் நந்தியின் நாக்கு இரு நாசிகளுக்கும் இடையில் நடுவாக துருத்திக் கொண்டிருக்கும். வாசியோகம் என்பதற்கு நந்தியே அதிபதி எனலாம். இவரது மூச்சுக்காற்றில் ஊஞ்சலில் இறைவன் ஆடுவதாக ஒரு நம்பிக்கை.சுவாசக் கலை வலது இடது அல்லது சூரிய சந்திர கலைகள் என்று வேறுபடலாம். நமது கைவிரலைப் பயன்படுத்தி நாசியை மாற்றி மாற்றி அடைத்து சுவாசப் பயிற்சியை மேற்கொள்கிறோம். நந்தி கைகளுக்கு பதிலாக நாவை பயன்படுத்துவது குறிப்பிடத் தக்கதாகும். இறைவன் கருவறையில் இருந்து வடியும் திருமஞ்சன நீர் (அபிஷேக நீர்) கோமுகம் வழியே வெளியேறுகிறது. அந்தக் கல்லின் வடிவம் பசுவின் பின்பகுதியைப் போன்று அமைக்கப்பட்டிருக்கும். பசுவை பின்பகுதியில்தான் வழிபட வேண்டும். எனவே, அதை கோமுகம் என்கிறோம். கோ முகத்திலிருந்து வெளிவரும் அபிஷேக நீர் புனிதமாகக் கருதப்படுகிறது. பிரதோஷப் பிரசாதமான அபிஷேக நீர், காப்பரிசி, திருநீறு போன்றவை மனதில் மற்றும் உடலில் உள்ள மாசுகளைப் போக்கி நற்கதியை அளிக்கும் என்றும் கூறுவர்

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

# பூண்டு சட்னி



**தேவையான பொருட்கள்:** பூண்டு, தக்காளி, காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை, எண்ணெய், உப்பு, கடுகு **செய்முறை:** முதலில் கடாயில் எண்ணெய் ஊற்றி அதில் காரத்திற்கு தேவையான அளவு காய்ந்த மிளகாய் சேர்த்து வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பின்பு, அதே கடாயில் 1 கப் அளவு பூண்டு சேர்த்து நிறம் மாறும் வரை வறுக்க வேண்டும். இப்போது அதனுடன் தக்காளி சேர்த்து நன்கு வதக்க வேண்டும். அடுத்தது, மிக்ஸியில் வறுத்த காய்ந்த மிளகாய், வதக்கி எடுத்த பூண்டு , தக்காளி சேர்த்து அரைக்க வேண்டும். இப்போது கடாயில் எண்ணெய் ஊற்றி, அதில் கடுகு, கறிவேப்பிலை சேர்த்து தாளித்து, அரைத்த சட்னியை அதில் கொட்ட வேண்டும். பச்சை வாசனை போகும் வரை எண்ணெய்யில் சட்னியை வதக்க வேண்டும். எண்ணெய் தனியாக பிரிந்து வந்த உடனே இறக்கினால் போதும், சுவையான அட்டகாசமான பூண்டு சட்னி தயார்.

# ABC ஜூஸின் முக்கிய நன்மைகள்...!

## தினமும் அருந்துவதால் கிடைக்கும் முக்கியப் பயன்கள்

ஆப்பிள் (A), பீட்ரூட் (B), கேரட் (C) ஆகிய மூன்றையும் சேர்த்து தயாரிக்கப்படும் ABC ஜூஸ், ஆரோக்கியம் நிறைந்த ஒரு பானமாகும். இதனை தினமும் அருந்துவ தால் கிடைக்கும் முக் கியப் பயன்கள் குறித்த தகவல்கள் இதோ:



**நோய் எதிர்ப்பு சக்தி:** வைட்டமின் சி நிறைந்தி ருப்பதால், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, நோய்த் தொற்றுகளிலிருந்து உடலைப் பாதுகாக்கும்.

**உடல் நச்சு நீக்கம் :** இதில் உள்ள பீட்டாலைன்கள் மற்றும் நார்ச்சத்துக்கள் கல்லீரல் செயல்பாட்டை மேம்படுத்தி, உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்ற உதவும்.

**எடை குறைப்பு:** குறைந்த கலோரிகள் மற்றும் அதிக நார்ச்சத்து காரணமாக, வயிறு நிறைந்த உணர் வைத் தந்து, உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவும்.

**செரிமான ஆரோக்கியம்:** நார்ச்சத்து மற்றும் பெக்டின் போன்ற சத்துக்கள் குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, செரிமானப் பிரச்சினைகளைக் குறைக்கும்.

**சருமப் பொலிவு:** வைட்டமின் A மற்றும் சி போன்ற ஆன்டி ஆக்சிடெண்டுகள் இருப்ப தால், சருமத்திற்கு இயற்கை யான பளபளப்பைத் தரும்.

# அமெரிக்காவை விட்டு வெளியேறாதீர்' எச்1பி விசா உள்ளோருக்கு நிறுவனங்கள் அலர்ட்!

அமெரிக்காவில் எச்1பி விசாவுக்கான கட்டணத்தை 1 லட்சம்டாலராகஉயர்த்தி அதிபர் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து, எச்1பி விசா வைத்திருப்போர் அனைவரும் குறைந்தது 14 நாட்களுக்கு அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டாம் என்றும், வெளிநாடுகளில் வசிக்கும் ஊழியர்கள் 24 மணி நேரத்துக்குள் அமெரிக்கா திரும்ப வேண்டும் என்றும் மெட்டா, மைக்ரோசாப்ட் போன்ற முக்கிய நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளன.

எச்1பி விசா மீதான கட்டுப்பாடுகளை தொடர்ந்து, தற்போது அமெரிக்காவுக்கு வெளியே வசிக்கும் தங்கள் ஊழியர்கள், மீண்டும் அமெரிக்காவுக்குள் நுழைய மறுக்கப்படுவதைத் தவிர்க்க 24 மணி நேரத்திற்குள் நாட்டுக்கு திரும்ப வேண்டும் என்று பல முன்னணி நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளன. மேலும், எச்1பி விசா மற்றும் எச்4 விசா வைத்திருப்பவர்கள் புதிய நடைமுறைக்கான விண்ணப் பங்கள் குறித்து புரிந்துகொள்ளும் வரை குறைந்தது இரண்டு வாரங்கள் அமெரிக்காவில் தங்கியிருக்க வேண்டும் என்றும், சிறப்பான எதிர்காலத்துக்காக வெளிநாடுகளில் உள்ள ஊழியர்கள் இந்த உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் பல நிறுவனங்களும் தங்கள் ஊழியர்களை மின்னஞ்சல்கள் மூலம் கேட்டுக்கொண்டுள்ளன.

CLASSIFIEDS

RENTAL

INDEPENDENT HOUSE FOR RENT @CHITLAPAKKAM Nr. ROSILY SCHOOL Ist flr.1K/2B/2H/1 PORTICO W.FACING/2 WHEELERS PARKING ONLY 88258 61009

FLATS FOR RENTAL @ CHROMPET AVAILABLE 2&3BHK PURE VEG 8072230451

NEW FLAT SALE

NEW FLAT SALE @E.TAM-IRUMBULIYUR 2BHK-962sqft UDS 390 sqft-Ist flr Rs.6000/sqft-E.FACING 98410 37438

INDEPENDENT HOUSE

IND. HOUSE @SP KOVIL VILLIAMBAKKAM Rs.15 LAKHS 99529 35178

RESALE

IND HOUSE FOR SALE @ CHROMPET NEMILICHERY 2BHK LAND AREA 575 SQFT BUILT UP AREA-1640 SQFT CCP 80722 30451

IND.HOUSE FOR SALE @ MADAMBAKKAM PADMAVATHY NAGAR - Nr AMUDHU SUPER MARKET 3/4 GROUND LAND WITH BUILDING N.FACING -G.FLR- +1 BUA-1450 SQFT LAND-40X45 95001 96316

FLAT RESALE 2BHK@NEHRU NGR 3BHK@HASTHINAPURAM 3BHK@SEMBAKKAM 98400 36137

INDEPENDENT HOUSE FOR SALE @ POLICHALUR LAKSHMI NAGAR CMDA APPROVED WITH PATTA LAND 2790 Sqft PRICE: 1.55 CR. 94455 68343

FLAT FOR RESALE @CHROMPET @RADHA NAGAR 2BHK-742 Sqft UDS-412 Sqft 1ST FLOOR 1BHK - 615 Sqft UDS - 318 Sqft 80722 30451

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா? GST ROAD NEWS-ல் விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டுமே 044 - 2224 0607 / 89395 26999

GST ROAD NEWS விளம்பர விசாரணைக்கு தொடர்பு கொள்ள: 8939 526 999 044 - 222 363 99

# மேற்கு மாம்பலத்தில் மாபெரும் கொலு விற்பனை கண்காட்சி



மேற்கு மாம்பலம் ஆரிய கவுடா சாலையில் பாணிகிரகா மண்டபத்தில் கடந்த 12 ஆண்டுகளாக தொடர்ந்து புதுச்சேரி வில்லியனூரை சேர்ந்த கைவினைக் கலைஞர் ஜனாதிபதி கைகளால் தேசிய விருது பெற்ற வில்லியனூர் சேகர் தலைமையில் புதுச்சேரி கைவினை கலைஞர்கள் சார்பில் நடத்தப் படும் கண்காட்சி கடந்த 18/9 /25 முதல் அக்டோபர் 2 தேதி வரை இந்த ஆண்டும் கொலு விற்பனை கண்காட்சி நடைபெறுகிறது. இந்த கொலு விற்பனை கண்காட்சியை கொலு நந்தினி மற்றும் குரோம்பேட்டையை சேர்ந்த சாந்தி முருகேசன், சன்மதி ஸ்ரீ ரஞ்சன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர். இது முழுக்க முழுக்க கைவினை கலைஞர்களால் மிகவும் நேர்த்தியாக உயிரோட்டமான கொலு பொம்மைகளை பிரம்மாண்டமாக தயாரித்து விற்பனைக்கு வைத்துள்ளனர்.இதில் ஆளுயர திருப்பதி வெங்கடேச பெருமாள் சிலை மற்றும் உத்தரகோசமங்கை மரகத லிங்கம் ஆகியவை மிகவும் நேர்த்தியாக இருந்தது. நவ திருப்பதி, அஷ்டலட்சுமி, நவக்கிரக நாயகியர், நவ நரசிம்மர், கடவுள் விவசாயம் செய்வது மற்றும் திருமண வீடு,மன்னர் அரச சபை பெண்கள் கிணற்றடியில் குளிப்பது துணி துவைப்பது போன்றவும் பூங்காவில் சிறுவர்கள் விளையாடுவது போலவும் அம்மன்கள் உலகப் புகழ் பெற்ற மைசூர் தசரா, குலசை முத்தாரம்மன் மற்றும் காளி ரூபத்திலும் அன்னபூரணி மதுரை மீனாட்சி காமாட்சி என்று பலவகை அம்மன்கள் கொலு பொம்மைகளாக தயார் செய்யப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மேற்படி கண்காட்சியில் ரூ. 50 முதல் 50 ஆயிரம் வரை கொலு பொம்மைகளை விற்பனைக்கு வைத்துள்ளனர் .இந்த கொலு கண்காட்சி பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது வீடுகளில் கொலு வைப்பவர்கள் தங்களுக்குத் தேவையான புதிய வரவு மற்றும் வித்தியாசமான கொலு பொம்மைகளை இந்த விற்பனை கண்காட்சியில் கண்டு களித்து வாங்கி செல்லலாம். மேலும் வில்லியனூர் சேகர் அவர்களை 9789061933 மற்றும் சுரேஷ் 90921 10014 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.



## குரோம்பேட்டை வியாபாரிகள் சங்கம்/அறக்கட்டளை இணைந்து கல்வி கொடை விழா

குரோம்பேட்டை வியாபாரிகள் சங்கம் மற்றும் குரோம்பேட்டை வியாபாரிகள் அறக்கட்டளை இணைந்து ராதா நகர் தெற்கு தெருவில் உள்ள சங்க அறக்கட்டளை கல்யாண மண்டபத்தில் அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு சீருடை நோட்டு புத்தகம் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் குரோம்பேட்டை நியூ காலனி அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர், அஸ்தினாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி, நேரு நகர் அய்யாசாமி பள்ளி,ஜமீன் ராயப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு ரூ 1.50 லட்சம் மதிப்பில் நோட்டு புத்தகங்கள், சீருடை,பண முடிப்பு வழங்கப்பட்டது. விழாவில் மறைந்த முன்னாள் பல்லவபுரம்நகர மன்ற உறுப்பினர் ஏ. சேவியர் அவர்களின் துணைவியார் பாமாவுக்கு ரூ.10,000 பணம் முடிப்பு வழங்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் குரோம்பேட்டை வியாபாரிகள் சங்கத் தலைவர் வி.எஸ்.பி. மதிவாணன், செயலாளர்கள் ஏ.ஏ.முருகேசன்,எஸ்.லியாகத்அலி.பொருளாளர் ஆர். மோரிஸ்,குரோம்பேட்டை வியாபாரிகள் அறக்கட்டளை தலைவர் ஏ. ராமஜெயம், செயலாளர் பி. இளராஜன், பொருளாளர் எஸ். டி.சேகர்,பிரஸ் பி.பழனி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .




அரிமா சங்க 1வது மண்டல ஆலோசனை கூட்டம் குரோம்பேட்டை ஆர்பி ரோட்டில் உள்ள சாஸ்தா மஹாலில் நடைபெற்றது.கூட்டத்தில் ஜி.என்.டி கே.எம்.ஜே. அசோக், மண்டலத் தலைவர் இ.ராஜமாணிக்கம், வட்டார தலைவர் . எம்.ஜெயபால், எம்.ஜே.எப். லயன் கே.ஹெச். சங்கரநாராயணன், ராதாகிருஷ்ணன், சங்கர்உள்பட பலர் கலந்து கொண்டனர்



நங்கநல்லூர் ஸ்ரீ சாய்ராம் ஹாலில் நடைபெற்ற கிரேசி குழுவினர் வழங் கிய அலாவுதீனும் 100 வாட்ஸ் பல்பும் நாடகம் நடை பெற்றது இந்நிகழ்ச்சியில் குரோம்பேட்டை சேர்ந்த சின்னத்திரை நடிகர் விசுவுக்கு கிரேசி பாலாஜி சால்வை அணிவித்து பாராட்டிய போது எடுத்த படம்.




அண்ணா பிறந்த நாளையொட்டி, குரோம்பேட்டை பகுதி அதிமுக சார்பில், ஜி.எஸ்.டி. சாலையில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு குரோம்பேட்டை பகுதி அதிமுக செயலாளர் குரோம்பேட் எம்.கே.சதீஷ் ஏற்பாட்டில், 28வது வார்டு வட்ட செயலாளர்கள் செல்வம் வழக்கறிஞர் சரவணன் மற்றும் பகுதி தகவல் தொழில் நுட்ப பிரிவு தலைவர் சின்னதுரை ஆகியோரின் வரவேற்பில்செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அதிமுக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## புதிய உச்சத்தை தொட்ட தங்கம் விலை



செப்டம்பர் 20ஆம் தேதி 22 காரட் தங்கம் விலை கிராமுக்கு ரூ.60 உயர்ந்து ஒரு கிராம் தங்கம் விலை ரூ.10,290க்கும், சவரனுக்கு ரூ.480 உயர்ந்து ஒரு சவரன் ரூ.82,320க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## ஆதார் கட்டணம் அக்.1 முதல் உயர்கிறது

ஆதாரில் தகவல்களை மாற்றுவதற்கான கட்டணம் அக்.1 முதல் உயர்கிறது. ஆதாரில் புகைப்படத்தை மாற்ற கட்டணம் ரூ.100ல் இருந்து ரூ.125ஆகவும், மற்ற தகவல்களை மாற்றுவதற்கான கட்டணம் ரூ.50ல் இருந்து ரூ.75ஆக உயர்த்தப்பட்டுள்ளது. புதிதாக ஆதாருக்கு விண்ணப்பிக்க கட்டணம் ஏதும் கிடையாது.




குரோம்பேட்டை குடியிருப் போர் நல சங்கங்களின் இணைப்புமையம் சார்பில் குரோம்பேட்டை ராதாகர் அனுமார் கோயில் அருகில் கோரிக்கை விளக்க தெரு முனைக்கூட்டம் தலைவர் ஸ்ரீதர் தலைமையில், செயலாளர் முருகையன்,பொருளாளர் அரசி முன்னிலையில் நடைபெற்றது.இதில் நூற்றுக்கும் மேற் பட்ட நலச்சங்கத்தினர், பொது மக்கள் கலந்துகொண்டார்கள். செயலாளர் முருகையன் கோரிக்கைகளையும் அவைகளை தீர்க்க வலியுறுத்தி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அவைகளின் தற்போதைய நிலை, எதிர் காலங்களில் எடுக்கப்படும் முயற்சிகள்/நடவடிக்கைகள் குறித்து விளக்கமாக தெரிவித்தார். இதில் சிட்லபாக்கம் சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர் விஸ்வநாதன், அறப்போர் இயக்கத்தை சார்ந்த டேவிட் மனோகர் ஆகியோர் கலந்துகொண்டு கோரிக்கைகளை வலியுத்தினர்.

கோரிக்கைகள் வருமாறு

1.ராதாநகர் சுரங்கப் பாதையில், திட்டத்தில் உள்ள படி பொதுமக்கள் சுரங்கப் பாதையிலிருந்து ரயில் நடைமேடைக்கு செல்ல படிக் கட்டுக்கள் அமைக்க பட வேண்டும். கிழக்குப் பகுதியில் சுரங்கப்பாதைக்கு அருகிலிருந்து, ஸ்டேசன் சாலை நடைமேம்பாலம் வரை அனுகு பாதை, நடைமேம் பாலம் அருகில் எஸ்கலேட்டர் வசதி ஒத்துக்கொண்டபடி செய்யப் படவேண்டும்.

2.வைஷ்ணவா கல்லூரி ரயில்வேகேட்டில் 2014ஆம் ஆண்டு திட்ட அறிக்கையின் படி, அரசுபேருந்து சென்று வரும் வகையில் இருவழி சுரங்கப்பாதை அமைக்கப் பட்ட வேண்டும்.

3.அஸ்தினாபுரம் பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அடிப் படை வசதிகள் செய்ய வேண்டும்.

4.ராஜேந்திர பிரசாத்சாலை, ராதாநகர் பிரதான சாலை, ஸ்டேசன் சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்றி அகலபபடுத்த வேண்டும்.

5.குடியிருப்பு பகுதிகளில் உள்ள மழைநீர் கால்வாய்கள் உட்பட அனைத்து மழைநீர் கால்வாய்க்களும் மழைகாலத் திற்கு முன்பாக, ஆக்கிரமிப்புக் களை அகற்றி, தூர்வாரி சுத்தப்படுத்த வேண்டும். மழைநீர்கால்வாய் இல்லாத பகுதிகளில் மழைநீர்கால் வாய்கள் அமைக்கப்பட வேண்டும்.

6.அஸ்தினாபுரம் பகுதி மக்கள் சந்திக்கும் மின்வெட்டு, குறைந்த/அதிகமின்னழுத்தம் போன்றவைகளிலிருந்து விடுபட, அறிவிக்கப்பட்ட துணைமின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. 50க்குமேல் குடியிருப்புக்கள் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளில் குப்பைகளை அவர்களே கையாள ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் என்ற அறிவிப்பை திரும்ப பெற வேண்டும்

8.குடிநீர் இணைப்புக்காக, முன்வைப்புத்தொகையாக ரூ.7500/ என்ற அறிவிப்பை திரும்ப பெற்று, பழைய முறையை பின்பற்ற வேண்டும். குடிநீர் குழாய் இல்லாத பகுதிகளில் குடிநீர்குழாய் அமைத்து குடிநீர் வழங்க வேண்டும்.

9.சாலைகள் அமைக்கப் படும்போது பழையசாலைகள் சுரண்டப்பட்டு, புதிய சாலைகள் பழையசாலைகளின் உயரத்திற்கு மிகாமல் அமைக்கவேண்டும், என்ற நீதிமன்ற ஆனையை பின் பற்றுவதுடன், சாலைபணி குறித்த விபரங்கள் அடங்கிய விளம்பர பலகை வைக்க வேண்டும். உரிய மேற்பார்வையுடன் தரமான சாலைகள் அமைக்கப்படவேண்டும்.

10.பொதுமக்கள், நலச்சங்கங்கள், இணைப்புமையம் கொடுக்கும் எழுத்துப் பூர்வமான கடிதங்களுக்கு அரசு ஆணை எண் 114/2006ல் உள்ள அறிவுரைகளை பின்பற்றி எழுத்துபூர்வ பதில் தரவேண்டும். 11. உள்ளாட்சி அமைப்புக்களின் வெளிப் படையான நிர்வாகத்தை உறுதி செய்யும் வகையில் குறிப்பிட்ட இடைவெளியில் இணைப்புமையம், நலச் சங்கங்கள் கலந்துகொள்ளும் கலந்துரையாடல் கூட்டங்களை கூட்டி மக்கள் பிரச்சினைகளை விவாதித்து நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட வேண்டும்

இந்த கோரிக்கைகள் அனைத்து மட்டத்திலும் எழுத்துப்பூர்வமாக நேரிலும், தபால் மூலமாகவும் கோரிக்கை வைத்தும் உரிய நடவடிக்கை இல்லாததால் இணைப்பு மைய செயற்குழு பொதுக் குழுவின் முடிவின்படி தெரு முனை கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து பிரச்சனைகளுக்கு தீர்வு ஏற்படாவிட்டால் கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதம், இறுதியாக தேர்தல் புறக்கணிப்பு போராட்டங்கள் நடைபெறும் என்று அறிவித்தனர்

On-Line Also. Age No Bar
SPOKEN HINDI - ENGLISH
HINDI PRACHAR SABHA
PARICHAYA TO PRAVEEN
Search @ Google for
MPR Hindi Study Centre
87545 19519 98418 19519

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள
பிரபல நிறுவனத்திற்கு Retd,
SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

NEED FEMALE
BRAHMIN COOKS
& KITCHEN ASSISTANTS
FOR OUR CATERING SERVICES
@CHROMEPET
PURUSHOTHAM NAGAR
99404 14187

ஸ்ரீ:
ஸ்ராத்த ஸ்தலா
(கிருஷ்ணா நகர், பம்மல்)
இங்கு ஸ்மார்த்த /
ஸ்ரீவைஷ்ணவ ஸ்ராத்தம்,
மாசிகம், சோதகும்பம்
முதலிய அனைத்தும்
ஸாஸ்த்ரோக்தமாக
நடத்திக் கொடுக்கப்படும்.
70107 36899
99404 86048

RAAJ
INSTITUTE
B.E., B.Com., M.B.A., Diploma
School Tuition for 6th to 12th
8th Pass Directly Join 10th
10th Pass Directly Join +2
STATE / NIOS / CBSE
Spoken English & Hindi
Tally,MS Office,C,C++
No.75, Station Road, Radha Nagar, Chrompet
90032 67050

NETLON
SAI SRI DHARSHINI ENTERPRISES
Plot No:10, Door.13, Mageshwari Nagar, 3rd Street,
Hasthinapuram, Chennai - 600 064.
SAINT-GOBAIN
MOSQUITO NET
PROPRIETOR M.VENKATESH, B.COM.,
97103 55252 / 86109 10731

KR HOMES
@ 2500/- SqFt.,
Building Construction
Renovation & Alteration
Including Sump & OH Tank
✓ Architectural Design
✓ Engineer Supervision
✓ Branded Materials
80724 99969

Newly Opened
SRI SASTHA MAHAL A/C
The Group of Sankar Constructions
Bookings Open
Fully Airconditioned Thirumana Maaligai
In Hasthinapuram, RP Road
Main Hall capacity of 500 persons (Floating 1000 Persons)
Dining hall capacity of 200 persons
14 A/C Rooms
Modular Kitchen with store room and service lift for dining
Passenger Lift capacity of 16 members
CCTV Camera for whole building
Vinayagar temple is within the premises
The hall is fully equipped with stand by Generator
Pooja items and Unjal available
Ample car parking available for both four wheelers and two wheelers
Valet Car Parking Available
No.32, Hariharan Towers, R.P.Road, Hasthinapuram, Chrompet - 44.
98416 59929 / 98416 59931 / 90030 10611

WANTED
♦ ADMIN STAFF
Any Degree With Computer knowledge & Fluent In English
♦ TELECALLERS
Any Degree With Fluent In English & Hindhi
Age below 40 - Female Candidate Only
SEND THE CV TO THE EMAIL: salam28273@gmail.com
94454 22306 / 97106 86204

# எனக்கும் ஸ்டாலினுக்கும் தான் போட்டி விஜய் பேச்சு

நாகை பிரச்சாரத்தில் தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் பேசியதாவது:

நான் மக்களை சந்திக்கக் கூடாது அவர்களுடன் பேசக் கூடாது, அவர்களுடைய குறைகளை கேட்கக்கூடாது, அவர்களுக்காக குரல் கொடுக்கக் கூடாது, என்ன தான் சார் உங்கள் எண்ணம். சரி ஒரு அரசியல் தலைவன் என்பதை எல்லாம் மறந்து விடுங்கள் ஒரு சாதாரண ஒரு தமிழ்நாட்டு மண்ணோட ஒரு மகனாக தமிழ் மக்களுடைய சொந்தக்காரனாக, என் மக்களை என் குடும்பத்தை என் சொந்தங்களை நான் பார்க்க போனால் என்ன பண்ணுவீர்கள் அப்போதும் தடை போடுவீர்களா.. வேண்டாம் சார் இந்த அடக்குமுறை, அராஜக எல்லாம் வேண்டாம் நாம் ஒன்றும் இங்கு தனியாள் கிடையாது, மாபெரும் மக்கள் சக்தி உடைய பிரதிநிதி, மாபெரும் பெண்கள் சக்தி உடைய சகோதரன், மாபெரும் இளைஞர் இயக்கமாக இருக்கிறோம் சார் மறுபடியும் சொல்றேன் 2026ல் இரண்டு பேருக்கு தான் இங்கு போட்டியே ஒன்று தவெக மற்றொன்று திமுக. இந்த பூச்சாண்டி வேலை யெல்லாம் காட்டுறதையெல்லாம் விட்டு விட்டு தில்லா கெத்தா நேர்மையா தேர்தலை சந்திக்க வாங்க சார்.

பாத்துக்கலாம் சார் கொள்கையை பெயருக்கு மட்டும் வைத்துக்கொண்டு குடும்பத்தை வச்சு தமிழகத்தை கொள்ளை அடிக்கும் நீங்களா??? அல்லது தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு வீட்டுக்குள் ஒருத்தனாக இருக்கும் இந்த விஜய்யா?? பார்த்துக்கலாம் சார்.

இனிமே இது போன்ற தடைகள் எல்லாம் போட்டீர்கள் என்றால் நான் நேரடியாக மக்களிடமே அனுமதி கேட்டுக் கொள்கிறேன் மக்களே நீங்கள் சொல்லுங்கள் நான் உங்களை பார்க்க வரக்கூடாதா?? நான் உங்களிடம் பேசக்கூடாதா?? உங்களுடைய குறைகளை கேட்க கூடாதா?? உங்களுக்காக நான் குரல் கொடுக்கக் கூடாதா??

இப்படி நமக்கு எல்லாம் தடையா போடுறாங்களே இந்த திமுக அரசு மறுபடியும் ஆட்சிக்கு வரணுமா? உங்க நல்லதுக்காக இருக்கும் உங்க தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைய வேண்டுமா?? சத்தமா சத்தமா கேட்டுச் சா மை டியர்....... நான் தான் ஏற்கனவே சொல்லி இருக்கேன்ல அவருக்கு ஆசையாக பாசமாக கூப்ட்டா பிடிக்கலைனு ஏன் மறுபடியும் ... கேட்டுச்சா சிஎம் சார்.... இந்தப் போர் முழக்கம் ஒரு நிமிடம் கூட உங்கள தூங்க விடாது, உங்களை துரத்திக் கொண்டே வரும் என்று கூறினார்

KUBERA TEXTILES
NEW COLONY, CHROMEPET
HDFC BANK (GROUND FLOOR)
98404 93934 / 96001 34184
NAVARATRI RETURN GIFTS
ஆயுத பூஜை விழாவிற்கு சால்வை, டவல் கிடைக்கும்

## சங்கர் கன்ஸ்ட்ரக்சன் குழுமத் தலைவர் திரு. K.H. சங்கர நாராயணனுக்கு எக்செலென்ஸ் இன் இன்ஜினியரிங் விருது




பல்லாவரத்தில் இன்ஜினியர் தினம் கொண்டாட்டம் நடந்தது. இதில் குரோம்பேட்டை சங்கர் கன்ஸ்ட்ரக்சன் குழுமத் தலைவர் திரு.K.H.சங்கர நாராயணனுக்கு தமிழ்நாடு நெடுஞ்சாலை துறையின் முதன்மை பொறியாளர் Dr.R.கிருஷ்ணசாமி ME, Ph.D விருது வழங்கினார்.

SCS
VIJAYADASAMI
ADMISSIONS OPEN

||வித்யாரம்பம்||
கற்றுக்கொள்ள ஒரு புனிதமான தொடக்கம்.
உங்கள் குழந்தையின் அறிவுப் பயணம்
S.C.S பள்ளியில் வித்யாரம்பத்துடன் தொடங்கட்டும்.

குறைந்த இருக்கைகளே உள்ளன. குழந்தை பராமரிப்பு,
Pre KG, LKG, UKG & Montessori
விஜயதசமி சேர்க்கைகள் திறக்கப்பட்டன.
உடனே பதிவு செய்து சிறப்பு தள்ளுபடி பெறுங்கள்
SCS KINDERGARTEN SCHOOL
#15 Ranganathan Street, Nehru Nagar
Chromepet, Chennai-44
Ph: 7868001786, 9282438103

FPA
Since 1997 | Reg:370-2009
FLAT PROMOTERS ASSOCIATION CHENNAI SOUTH
ISO 9001:2015 CERTIFIED COMPANY
September 27th Sat & 28th Sun
Scan and get free passes
வாங்க வீடு வாங்க

BIGGEST HOME EXPO - 2025
PLOTS | VILLAS | APARTMENTS
SRI VASUDEVA THIRUMANA MALIGAI A/C
Camp Road Junction, Tambaram, Chennai - 600073
DON'T MISS OUT!
Exciting Offers
73050 44844
PROPERTIES PRICE START FROM
20 Lakhs to 2 Crores
TITLE SPONSOR KASSA ABS DOORS
Co-Sponsor FLOOR LOCATOR
Gold Sponsor SBI State Bank Of India, IIFL HOME LOAN
Silver Sponsor Canara Bank, Bank of Baroda, NEW V.S.S TRANSPORTS All Building Material Supply

Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725